உ

சிவமயம்.

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள்
பரம்பரையில்
திருவையாற்றிலெழுந்தருளிய
சிவாநந்தசுவாமிகள்

# நவரத்திநம்.

## தேவாரப்பதிகம்.

---

இவையிரண்டும்

ஷை சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய
தஞ்சைமாநகரம்
A. வீரபத்திரபிள்ளையால்
இயற்றப்பட்டு,

ஷை சுவாமிகள்மாணாக்கருளொருவராகிய
கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி
சு. தெய்வசிகாமணிக்குருக்களவர்களால்

சென்னை:
ஹிந்து முத்திராட்சரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

---

சாலியவாகன ௵ ௧௮௦௪-ல் நிகழ்கின்ற
சித்திரபாநு ௵ புரட்டாசிமீ.

PRINTED AT THE HINDU PRESS, MOUNT ROAD:—MADRAS.

உ

சிவமயம்.

திருவையாறு

சிவாநந்தசுவாமிகள்

# நவரத்திநம்.

## காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

சிவரத்தி நங்கொளை யாற்றுச் சிவாநந்த தேசிகற்கோர்
நவரத்தி நத்தொடை சாற்றவின் சொற்பொரு ணன்கருளும்
உவரத்தி சூழ்புவிக் கோர்முத லாயன் புடையருளங்
கவரத்தி மாமுகத் தோர்கோட்டு முக்கட் கணபதியே.

### ௨௬-சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருவரு ளிரண்டுமா றின்றியன வரதநஞ்
சிந்தையுடை யார்பெற்றிடச்
செய்தின் பளிப்பமென மெய்ந்நின் றுணர்த்துநின்
செந்தா மரைத்தாள்களுஞ்
செப்பிரு வகைப்பற்று மற்றவறி ஞர்க்கிது
சிறப்பெனக் காட்டும்வெண்மை
செம்மையிரு வண்ணமற் றொருவண்ண முற்றவத்
திரமசைத் திலகுமிடையும்
உருநாம மெனுமகித ரருகுரு தொளிர்ஞான
வுண்மையர சாகிமுத்தி

உலகாளு மாதவர்க் கிதுகாப் பெனக்காட்டு
மொண்கைப் பணிந்தவுருவும்
உடலாதி மும்மையுந் தத்தஞ்செய் தூறுதொண்
டுளூற்றுமெய் யடியர்க்கெலாம்
உபயவினை யைப்பரித் தபயங் கொடுக்குமல
ரொத்தவிரு கைத்தலமுமன்
மருவுமா மாயையெனு மிகல்செகுத் தணிவெற்றி
மாலையீ தென்றுணர்த்த
மகிதல மெலாமொழித் திடுமுருத் திரனக்க
மணிமாலை கொண்டமிடறும்
மன்னுமா வாக்கியத் துண்மையோ தும்பவள
வாயுமா லுந்திமுகமா
வந்தநான் முகன்முகத் தினியுளூர் கண்டுமுக
மலர்சாந்த முகமுமாளு
அருள்பொழியு மிருவிழியு மிலகுதிரி புண்டர
மணிந்தநுத லுந்தனையலா
தனுவுமின் றெனுமகுட மணிமுடியு மடியனே
னனுதினம் போற்றவருள்வாய்
அண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை சிவாநந்தனே. (௧)

உலகுபுகழ் சனகாதி நால்வருக் காலடியி
லுண்மைஞா னத்தைபோதா
துணைசெயற் காதிகுரு தக்ஷிணா மூர்த்தியா
யோர்வடி வெடுத்ததற்பின்

புலகுய்ய வருசங்க ராசாரி யற்கடிமை
 யுற்றவந் தணர்மரபில்வந்
துணர்விலா விருணெஞ்ச முடையரோ னுந்தன்னை
 யுன்னினோர்க் கவ்விருளொரீஇ
இலகொளி செயுஞ்சுயம் பிரகாச நாதனரு
 ளெய்தியிய லாச்சமயிகள்
என்சாமி யுன்சாமி யென்றேது மிறைவர்கட்
 கிறைவனா னென்றுணர்த்த
எழின்மேவு நற்சாமி நாததே சிகனென்
 றியற்பெயர் புனைந்துவந்திங்
கெல்லோர்க்கு மின்னுந்த னுண்மையறி விப்பதற்
 கெச்சிவ ருள்ளின்கனும்
பலகலையு மக்கரத் தன்றியய லொன்றிலாப்
 பான்மைபோ லெக்காலமும்
பஞ்சகோ சத்தினப் பாற்பட் டிருக்கின்ற
 பதியெனும் பொருள்விளங்கப்
பஞ்சநத நாதனென் றபிதான மேவிவளர்
 பரகுருவி னானந்தமே
பக்குவ ரடைந்துய்வ தற்கெழுந் தோர்பெயர்
 படைத்ததென வந்தபரனே
அலகிலாப் பல்வடி வெடுத்தெடுத் தெய்த்தயரு
 மடியேனை யீடேற்றமெய்
யாதரவு நினையன்றி வேறுகதி காண்கிலே
 னாதியே சோதியேயென்
றண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
 மஞ்சலிசெய் பஞ்சநதியில்
 [நித

அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை.சிவாநந்தனே. (உ)

கங்கையிள வெண்பிறையு மக்கறுகு தாதகி
கடுக்கைவா சிகையுங்கவின்
கற்றைவார் சடையுமலை கடன்முர சதிர்க்கவரு
காமனைக் காய்ந்தவிழியுங்
கதிர்மணிக் குழைகளுஞ் சதுர்முகத் தொகுதியுங்
கறைமிட று மொய்ம்பாறுமெண்
கரமுங் கபாலமறி பாலமுஞ் சூலமுங்
கட்செவிக் கலனுமழியா
மங்கல மிடற்றம்மை பங்குமுப் புரிநூலு
மாலயன் முடிமாலையும்
மதகரிப் போர்வையும் புலியுரித் துகிலுநெடு
மால்விடையும் வீரகண்டா
மணியையு மறைத்துபய சரணமுஞ் செந்துகின்
மருங்குநீ றணிமேனியும்
மார்பிலொளி ரக்கமணி மாலிகையு மம்புய
மலர்க்கர மிரண்டுமடியார்
புங்கமிகு மன்பினணி செஞ்சொன்மலர் மஞ்சரி
புனைந்ததிண் புயமிரண்டும்
பொற்புலவு கந்தரமு நற்பவள வாயுமருள்
பொங்குமிணை விழியுநெற்றிப்
புண்டரமு ஞானவொளி வீசுமொரு வதனமும்
பொலிவுறக் காட்டிவந்தென்
பொய்ப்போத வன்பேக மெய்ப்போத வின்பானு
போகப்ர வாகநிலையை

அங்கையா மலகமென விங்கெனக் கருள்செய்த
  ஆச்சரிய மென்னமொழிவேன்
அந்த்ர துரந்தர பரம்பர சிதம்பர
  வனும்ய மனுநீதவென்
றண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
  மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அறுமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
  அருணிறை சிவாநந்தனே (௩)

நீர்மேவு வெண்டேரி னேர்மேவு பிரபஞ்ச
  நிலையென்று நாடியுரியூன்
நெய்த்தோ ரழுக்கென்பு சுக்கிலஞ் சலமல
  நிணஞ்சீ குறும்பிரோமம்
நேர்வாத பித்தங் கபந்தண்மை வெம்மையிவை
  நிற்குநிலை யற்றவுடலை
நெஞ்சகத் தகமென்று மோர்போது முன்னாத
  நின்மலா காரநிபுணர்
சீர்மேவு நின்கழற் கன்பமைத் தட்டமா
  சித்திகளையும் வெறுத்துச்
சின்மயா நந்தநிதி பெற்றார்க ளாயினேன்
  சிங்குலைவக் குருசியாகத்
தினமுண் டுடுத்துநறு நிழலிற் றுயின்றிவண்
  சிந்தா குலங்கள்விளையுந்
தீயவிவ காரப் பெரும்பயிர் வளர்த்தவத்
  தினமாக் கழிக்கிறனை
ஏர்மேவு முன்னூலி னன்னூ லுரைப்படி
  யிலங்குநிற் குணவாழ்வடைந்

திருவினை மயற்பிறவி யென்னுமில் லாமையுயி
ரொய்தினுக் குறண்மெய்யைவிட்
டேகுவது போலகல்வ தெக்கால முணாசெய்தி
யெவ்வெவர்க ளெவைகேட்பினும்
இல்லையென் னாதுதவ வல்லவருள் வள்ளலே
யிந்திரவி வந்துதவழும்
ஆர்மேவு மாகமுயர் மாடத் துகிற்கொடிக
ளகிலத்து ளோர்களேவி
டடையக் கருத்துளோ ரிங்குவம் மின்னென்
றழைத்தல்போ னின்றசைப்ப
அண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை சிவாநந்தனே (௪)

மண்ணமுத மங்கியொலி விண்ணிரவி திங்களிய
மானனெண் வகைமூர்த்தமாய்
வாசாம கோசரம தாயிலகு நித்யசின்
மாத்திரப் பொருளாயநின்
வடிவையறி யப்புகுந் தோர்களுக் குள்ளதரு
மறைநான்கு மாராய்வெனும்
வழிநோக்கும் விழியொன்று மவ்வழி கடந்தேறு
மார்க்கநற் சோபானமாம்
உண்ணினைவு நானென்ப தாரிந்த வுலகமே
துற்பவ மொடுக்கமெவ்வா
றுண்டாய திவையாவ ருடையதின் னவையொழித்
துயர்முத்தி யின்புநல்கும்

உணர்வாய தெத்தன்மை யுள்ளதஃ துற்றுரை
யுற்றுணர்வ தெவ்வண்ணமென்
றா[illegible]க்கு மாசறு விசாரமெனும் விழியொன்று
முபயநேத் திரமென்பரிவ்
வண்ணமோர்ந் துள்ளபடி யோர்கணய் போதேனு
வற்புற நினைக்கினுள்ளம் [ம்
மலைபோல் வளர்ந்துமதி யணுவா நலிந்தகில
வாதனைக் குள்ளாகுதே.
மறையோ னமைத்தவிதி முறையோ மலர்க்கணெடு
மாலோ னளிப்பின்வளமோ
மாயா விநோதப்ர தாபமோ மோகாதி
வைப்பிடம் பிறிதில்லையோ
அண்ணலே நின்னடியை நம்பினேற் கருளினின்
னடியா ரடாதென்பரோ
ஐயநீ யின்னதென் றுள்ளவா றுரைசெய்தி
அரகர மகாதேவவென்
றண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை சிவாநந்தனே (௫)
கருதுலக முயிர்பரன் றிரிவித நிறங்கொடு
கதிக்குநின் கருணைவடிவைக்
கண்டவர்க ளுண்டெனு தின்னுநான் கண்டிலேன்
கண்டிலே னென்றுமொழியுங்
காரணமு தேதென்னக் கண்டாய்வு கண்டுணர்வு
காணினின் னடிகாண்கிலாக்

காலத் தசத்தெனக் கண்டிருந் தனனின்று
கண்டகா லத்துள்ளதே
இருவகைக் காலத்தி னியல்போதி லுள்ளதை
யியம்புறுர் கண்டோர்பிறர்க்
கென்றெணி யசத்தென்ற தோர்கால மதுநீ
யெனக்கேட்ட பின்புகாண்டற்
கெதிரொன்று மின்மையா லுளதென்ற காலமீ
திக்கால மேதமியனேற்
கின்புதவு காலமென நம்பினே னெக்காலு
மினியெனைக் கைவிடாதே
திருமருவு மார்பனய னடிமுடியு மளவிடாச்
செய்யமா மணிமேருவே
செங்கதி ரனற்சோம னுதியை விளக்குமுயர்
செம்பொற் சுயஞ்சோதியே
திரிவித பரிச்சேத மருவுறு தென்றுஞ்
சிறந்திலகு மெய்த்தெய்வமே
செய்யமறை யாறங்க மின்னமுங் குறிகுணஞ்
செப்பொணுப் பேரின்பமே
அருமையுறு சாதன மிகுந்தொண்ட ருள்ளமெனு
மம்பலத் தாடுமரசே
ஐந்தொழி லமைக்குமொரு சித்தனே முத்தனே
ஐயனே மெய்யனேயென்
றண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறைசிவாநந்தனே. (௬)

பூதலத் தறிஞராம் பொறியூன மருகுருப்
புனிதமிகு மாக்களுருவிற்
புருஷராய்ச் சன்மித்த லரிதென்ப ரதனைப்
பொருந்தியு மதற்குரித்தாம்
புருஷார்த்த மாமறம் பொருளின்பம் விடெனப்
புகலுநால் வகையவற்றுட்
புரிதரு தவந்தான மிருவகையு மறமெனும்
பொருளினுக் கங்கமிவையுட்
சாதகத் தானமிற் குடலாவி பொன்னையுந்
தத்தங் கொடுத்தெங்கணுந்
தற்சுதந் தரமின்றி நிற்பதா மாங்கஃது
சாராது நிற்பவற்குன்
சத்தையன் றித்தானு மற்றையரு மின்மையாற்
றற்செய லயற்செயலெனச்
சாரிதா கிதமற் றிருப்பதே மேலான
தவமாகு மறிவிலாகின்
போதச் சுயஞ்சோதி யருளன்றி யொன்றுமெய்ப்
பொருளல்ல வென்றனைத்தும்
பொய்மையென் றறிவதே பொருளாகு மறியுமப்
பொருளா யிலங்குநித்ய
பூரண காரமா மின்பமே யின்பமாம்
புல்லுமிவ் வின்பலான்மேற்
பொருளொன்றி மன்னிய மிலாமையா லன்னதே
புகுமுத்தி யாமிவற்றை
ஆதரத் தோடறித லரிதென்ப ரொளியனேற்
கரிதெனு தெளிதினிவைதந்

தருள்வதுன் பாரமுற் புலவோர் தினம்புலவ
 னையனென் றேத்தெடுக்கும்
அண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
 மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
 அருணிறை சிவாநந்தனே. (எ)

மணிகொண்ட கடலுலகி னிராவி யானதென
 வடிவமும் பெயருமருவா
வஸ்துவாய் நின்றநீ வித்தையான் மான்காட்டி
 மானைப் பிடிக்குமவர்போன்
மாணவர்க ளாணவ வுடற்பவ மகற்றவோர்
 மானிடச் சட்டைவாய்ந்து
வைகுமிட் மான்மியத் தலவாச மாமுனது
 வாக்கிய மெழிற்றீர்த்தமாந்
திணிகொண்ட நின்புகழை யெங்கணும் விளக்கலே
 தேவால யத்தீபமாந்
தினமுநின் றிருவடிக் குள்ளன்பொ டுந்தொண்டு
 செய்வதே சிவபூசையாஞ்
செப்புநின் றிருமொழியை யன்றிவே றென்றினுஞ்
 சிந்தைமொழி யைச்செலுத்தாச்
சீலமே விரதமாம் நின்னன்ப ருக்குணவு
 செய்விக்க னைவேத்யமாம்
பணிகொண்ட மெய்யாதி யைவகைப் பொறிவயிற்
 பற்று துளந்தனைநிறீஇப்
பாராதி சிவபர மியாவுநின் னுருவெனப்
 பாவித்தல் சிவயோகமாம்

பாவிக்கு நினைவுநின் னுருவிலோய்ந் தேகமாப்
படிவதே மெஞ்ஞானமாம்
பன்னுமிவ் வெண்வகையு மன்னியா னுய்வுறப்
பண்ணுவது நின்னதருளாம்
அணிகொண்ட சர்வசீ வாதிக்கு ளுஞ்சச்சி
தாநந்த மயமானநின்
அற்புதத் திருவடிவை நோக்கிவிழி யிமையாரு
மன்பின்மிக் கோருமான
அண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை சிவாநந்தனே. (அ)

திருவுலகு கங்கைநீர் மண்கருது பூமணி
திருக்கற வடைந்தோர்க்கெலாஞ்
செல்வமொடு மெய்யறிவு தூய்மைநற் பலனுளஞ்
சிந்தித்த வெல்லாந்தருஞ்
செயலினு லாம்பெற்றி யாநந்த மொன்றதாஞ்
செப்புறு மிரண்டிலாவச்
சின்மையா நந்தமே தந்தைமுதன் மூவருஞ்
சேர்பூர ணாநந்தமாம்
மருவுமிவ் வாநந்த மேயெமக் கெழிலுண்மை
வடிவமென் றேதுவானும்
மாணவர் குழாங்களுக் கெஞ்ஞான்று மாநந்த
மன்னிநின் றிடவழங்கும்
மாட்சியாற் றெழிலானு நாமந் தரிப்பதே
மரபென்ன விருவகைப்பேர்

வாய்ந்திரண் டொன்றும லொன்றாய் வழங்குமோர்
மாசிலா நாமமேவிப்
பெருமகி சுமக்குஞ் சகத்தெழுந் தேமெனப்
பேசிடா தடியர்க்கெலாம்
பெயரா லுணர்த்தருட் பெற்றியோய் நின்சீர்ப்
பெரும்பயோ ததியினுண்டு
பேரன்பி னோரெலா மற்புதத் தமிழ்மாரி
பெய்தனர்க ளம்மழையினோர்
பெய்துளி யருந்தியடி யேனுநவ ரத்திநப்
பேரிட் டுரைத்தவிதனை
அருமைய தெனக்கொண் டணிந்தின் பளித்திநின்
னடியிணைக ளென்றும்வாழி
அடியார்க ளனைவரும் வாழியித னைக்கற்கு
மன்பினோ டொன்றும்வாழி
அண்டரொடு தொண்டர்களு மெண்டிசையு மண்டி
மஞ்சலிசெய் பஞ்சநதியில் [நித
அருமறைக ளோதந்த மருவுகுரு வாய்வந்த
அருணிறை சிவாநந்தனே. (௰)

## நவரத்திநம்.

முற்றிற்று.

சிவமயம்.

சிவாநந்தசுவாமிகள்

# தேவாரப்பதிகம்.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

சீரம் புனைவான் சிவாநந்த தேசிகன்றாட்
காரம் புனைவா னகம்புனைவாம்—ஏரம்பை
அத்தத்தா னத்தனரு ளத்திமுகத் தத்தத்துப்
புத்தத்தா னத்தனடிப் பூ.

## பதிகம்.

உலகெலா முய்வான் கங்கை யொன்றிரண் டிருகால் காட்டி
இலகுமா லயன்போற் றையாற் றெழுஞ்சிவா நந்த நாதா
கலகமா நாமரூப கற்பனை முழுது மோட்டித்
திலகநான் மறையிற் றுண்மை தெளியுமா றருள்செய்வாயே.(க)

வேலைசூழ் புவியுஞ் சேணும் விரைகமழ் வான்றோய் பைம்பூஞ்
சோலைசூ ழையாற் றையர் தொழுஞ்சிவா நந்த நாதா
மாலைசூழ் நிறத்த வாசி மாதிரத் திறையோன் காணுங்
காலைசூழ் முனநீ யென்சே கரத்தின்மேற் கரஞ்சேர்ப்பாயே.(உ)

பூவிலாக் கமல மில்லாப் புறம்புகா துணர்ந்தோ ருள்ளங்
கோவிலா வுறையை யாற்றெண் குணச்சிவா நந்த நாதா
தாவிலா வுளத்த ழுக்கித் தலையிலாக் கமல மூன்றும்
மேவிலா வறிவா நந்தம் விளையுமா றருள்செய் வாயே. (ங)

தானமுந் தவமுஞ்சாது சங்கமுந் தடையி லாமெய்ஞ்
ஞானமும் பெருகும் பஞ்ச நதிச்சிவா நந்த நாதா
வானமண் முதலீ றைந்தாய் வருஞ்சரா சரங்க ளெல்லாங்
கானனீ ரெனத்தேர்ந் துய்யுங் காட்சிதந் தாட்கொள்வாயே.(ச)

பண்ணினோ டருட்பா சாத்திப் பழமறை புதுக்கு நான்கு
புண்ணியோர் புகழை யாற்றெம் பொருட்சிவா நந்த நாதா
மண்ணிலோர் பொருளை வேறா மதித்திடா தனைத்து நின்சீர்
வண்ணமா நோக்கும்போத வாழ்வெனக் கருள்செய்வாயே (௫)

சத்தமூன் றத்த நான்கு தருணரும் வேட்டத் தங்கம்
வைத்தவா விடுமை யாற்றில் வருஞ்சிவா நந்த நாதா
நித்தநின் னுருத்தி யானம் நின்றுதி நின்றாட் டொண்டென்
சித்தமும் வாக்கு மெய்யுஞ் செய்யுமா றருள்செய் வாயே (௬)

செப்பிலா யிரந்தி ருக்கோன் சிலைவிலான் சிலத னோடும்
ஒப்பிலா வளஞ்சா லையாற் றுயர்சிவா நந்த நாதா
வைப்பிலா விழைந்துன் றாட்டாமரைமலர்க்குளம்வைத்தேனைத்
தப்பிலா வளியார் சாலஞ் சார்தரப் பணித்தாள் வாயே. (௭)

ஒன்றுமே லொன்றா மாக்கமொன்றுமோ ரொன்பானொன்றர்
என்றுமேத் தெடுக்கு மையாற் றெழிற்சிவா நந்த நாதா[யேன்
துன்றுமே லயனங் காட்டித் தொடர்வினைத் தொடர்பை நா
கன்றுமே லகரஞ் சூட்டிக் கதிபெறற் கருள்செய் வாயே. (௮)

காவலோர் மொழிமுன் பின்னோர் கவிமழை பொழியுந் தூய
நாவலோர் வசிக்கும் பஞ்ச நதிச்சிவா நந்த நாதா
ஆவலோர் மூன்றிற் பற்றா ரடைபொரு ளிடையி லாநின்
காவலோ ரிரண்டா மேதில் காண்கிலேன் கடையனேனே. (௯)

எந்தையா யிறையா யின்ப மெனக்கிடு மிருதா வாகி
வந்தையாற் றலவுஞ் சிந்தா மணிச்சிவா நந்த நாதா [தென்
முந்தையா நவமா வென்னு மொழிதரா மொழிப்பொன் றந்
சிந்தையா குலந்தீர்த் தாளுன் சேவடி போற்றி போற்றி. (௰)

தேவாரப்பதிகம்.

முற்றிற்று.